ஸ்ரீ ராமாநுஜன் 170.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 15	1963௵ பிப்ரவரி௴ சுபக்ருத்௵ மாசி௴	ஸஞ்சிகை 2

திருவாய்மொழி நூற்றந்தாதி-59.

நீராகிக் கேட்டவர்கள் நெஞ்சழிய * மாலுக்கும்
ஏரார் விசும்பி லிருப்பரிதா—* ஆராத
காதலுடன் கூப்பிட்ட காரிமாறன் சொல்லை *
ஓதிடவே யுய்யு முலகு.

கேட்டவர்கள்	—(தம்முடைய ஆர்த்தநாதத்தைக்) கேட்டவர்கள்
நீர் ஆகி நெஞ்சு அழிய	நீராய்க் கரைந்து நெஞ்சு சிதிலமாகும்படியும்
மாலுக்கும்	—ஸர்வேச்வரனுக்கும்
ஏர் ஆர் விசும்பில்	—செல்வம் மிகுந்த பரமபதத்திலே
இருப்பு அரிது ஆ	—எழுந்தருளியிருத்தல் அஸாத்யமாம்படியாகவும்
ஆராத காதலுடன்	—பரிபூர்ணமான ஆசையோடு
கூப்பிட்ட	—அவனைக் கூவி யழைத்த
காரி மாறன்	—நம்மாழ்வாருடைய
சொல்லை	—அருளிச் செயலை
ஓதிடவே	—ஓதின அளவிலே
உலகு உய்யும்	—உலகம் உஜ்ஜீவிக்கும்.

* கேட்டவர்கள் நெஞ்சுருகிக் கரையும்படியாகவும் எம்பெருமானுங் கூடத் திருநாட்டில் தரித்திருக்க முடியாதபடியாகவும் பெருமிடறு செய்து * நீராய் நிலனாய்ப் பதிகத்தில் கூப்பிட்டழைத்த ஆழ்வாருடைய திவ்யஸூக்தியை அதிகரிக்கவே உலகம் உஜ்ஜீவித்ததாகும் என்பது தேர்ந்த கருத்து. * பொன்னுலகாளீரோ * என்கிற கீழ்த் திருவாய்மொழியில் சில பறவைகளை நோக்கித் தூது செல்லும்படி வேண்டினார்; மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ வென்று கூவுமால் * என்றபடியே ஆழ்வாருடைய ஆர்த்த த்வனிக்கு அசேதனங்களான மரங்களு மிரங்குமென்றால் சிறிது சைதன்யமுடைய பக்ஷிகள் இரங்கச் சொல்ல வேணுமோ? (இரங்குவதாவது நெஞ்சு அழிகை.) அவை அவ்விடத்திலேயே நெஞ்சழிந்து தூது செல்ல மாட்டாமே கிடந்தன. "அந்தோ! ஆழ்வாரை இப்படியும் துடிக்க விட்டானே எம்பெருமான்!" என்று நைந்து கிடந்தன. * ஊற்றின் கண் நுண் மணல் போலுருகா நிற்பர் நீராயே * என்று கீழ்த் திருவாய்மொழிக்குக் கூறின பல ச்ருதி முந்துற முன்னம் அந்தப் பறவைகளினிடத்தே பலித்ததாயிற்று. இனி என் செய்வதென்று பார்த்தாராழ்வார்; நம் கையில் ப்ரஹ்மாஸ்த்ர மிருக்கப் பிறரிடத்தே பல் காட்ட வேணுமோ நாம்! என்று நினைத்தார்; அதாவது—அவன் எழுந்தருளியிருக்கிற பரமபதத்தளவும் சென்று கேட்கும்படியாகக் கூப்பிடுவோம்; அவன் சேதனனன்றோ; அதிலும் பரமசேதனனன்றோ; நாம் பெருமிடறு செய்து கூப்பிடும் ஆர்த்த த்வனியைக் கேட்டுங் கூடவா வந்து உதவாமற்

போவன் என்று நினைத்து. தம்மிடற்றோசையையிட்டு அழைத்துக் கொள்ளப் பார்க்கிறார்; கலங்காப் பெருநகரமான ஸ்ரீவைகுண்டத்திலும் அவன் தரித்திருக்க மாட்டாது கால் குலைந்து வரும்படி பெருமிடறு செய்து கூப்பிடுகிறார் இத்திருவாய்மொழியில்.

தூது போவார்க்குக் காலாலே யாதல் சிறகாலேயாதல் போகவேண்டுகையாலே தடையுண்டு; இவருடைய மிடற்றோசைக் கொரு தடையுமில்லையே; * உள்ளெலா முருகிக குரல் தழுத் தொழிந்தேன் * என்னும்படியான அவஸ்தையிலும் ஒரு அபிநிவேச விசேஷத் தாலே உரக்கக் கூப்பிடுகிறார். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"பிராட்டி சிறை யிருந்தது பராநுக்ரஹத்தாலே யானாப்போலே இவருடைய வ்யஸநமும் பராநுக்ரஹத் துக்கு உடலாயிருக்கிறபடி. அவள் சிறையிருந்தபடியை ஸ்ரீவால்மீகி பகவான் எழுதி வைத்து இன்று நாடெல்லாம் வாழ்கிறாப்போலே, அன்று இவர் தாம் வ்யஸநப்பட்டாரே யாகிலும் இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் லோகத்துக்குத் தண்ணீர்ப் பந்தலாயிற்றது. திருக்குழலோசையாலே திருவாய்ப்பாடியிற் பெண்களெல்லாம் பட்டதைத் தம்மிடற் றோசையாலே அவன் படும்படி பண்ணுகிறார்." என்று. ஆறாயிரப்படி அவதாரிகை:— "இப்படி தூத ப்ரேஷணம் பண்ணியும் எம்பெருமான் வாக் காணாமையாலே அவனைத் தம்முடைய பெரிய ஆர்த்தியோடே கூடத் திருநாட்டிலே கேட்குமபடி கூப்பிட்டழைக் கிறார்." என்று. உண்மையில் இத்திருவாய்மொழிக்கு "நீராகிக் கேட்டவர்கள் நெஞ்சழிய, மாலுக்கும் வைகுந்த விசும்பில் இருப்பரிதா—ஆராத காதலுடன் கூப்பிட்ட" என்றிங்ஙனே பாசுரமிட்டது பேரின்ப வெள்ளம். ... ... (59).

ஆங்கிலத்தில் அபூர்வ ராமாயணம்.

சில பல வருடங்களுக்கு முன்பு அபூர்வ ராமாயணம் என்றொரு தமிழ் நூலை நாம் இயற்றியிருக்கிறோமென்பது பெரும்பாலும் யாவரு மறிந்ததே. ஸ்ரீராமாயணத் தொடக் கத்தில் நாரத மஹர்ஷியை நோக்கி வான்மீகி முனிவர் பதினாறு திருக்குணங்களை யெடுத்துக் கூறி இவற்றையுடைய ஒரு மஹா புருஷனைச் சொல்லவேணுமென்றன்றோ கேட்டிருக்கிறார். அப்பதினாறு திருக்குணங்களையும் ஸ்ரீராமாயண கதைகளைக் கொண்டு இராமபிரானிடத்திலே விரிவாக நிரூபித்துக் காட்டியிருப்பது நம்முடைய அபூர்வ ராமாயணம். இதை நாம் தெலுங்கு பாஷையிலுமெழுதி நமது தெலுங்கு மாஸிக பத்ரிகையிலும் அச்சிட்டிருக்கிறோம்; ஸம்ஸ்க்ருத பாஷையிலெழுதி ஸம்ஸ்க்ருத மாஸிக பத்ரிகையிலும் அச்சிட்டிருக்கிறோம்.

இஃது ஆங்கில பாஷையிலும் வெளிவர வேண்டுமென்று (Gwaliar) குவாளியர் நகரத்தில் வாழும் ஸ்ரீ, உ. வே S. ஸத்யமூர்த்தி ஐயங்கார் ஸ்வாமிக்குத் தோன்றி அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நமக்கனுப்பினார். அவருடைய ஸம்பிரதாய ஞானவிசேஷத் தையும் தமிழ்ப் புலமையையும் நாம் நன்கு அறிவோம். அவரது ஆங்கிலப் புலமையைப் பற்றி நாம் நேராக அறியகில்லோமாயினும் அறிஞர் பலர் வாயிலாகக் கேட்டறிந்திருக் கிறோம். 'இது மொழிபெயர்ப்பு' என்று தெரிந்து கொள்ள இயலாதவகையில் ஸ்வதந்திர க்ரந்தம் போலவே எழுத வல்லவர் என்றும் அவ்விதமாகவே எழுதியுள்ளாரென்றும் ஆப்தர் கள் உகந்து வியந்து கூறினபடியால் இதனை நாம் அச்சிடுவித்தோம். அஃது இப்போது இந்த ஸ்ரீராமாநுஜனில் சேர்க்கப்பட்டு வெளிவருகின்றது.

நமது ஸ்ரீராமாநுஜனைப் பெற்று வாசிப்பவர்கள் யாவரும் ஆங்கிலம் பயின்றவர்களென்று சொல்ல முடியாதன்றோ. நம்முடைய ஊஹத்தில் ஆங்கில மறிந்தவர்களாகக் கருதப்படுகின்றவர்களுக்கு மட்டுமே அது சேர்ந்த பத்ரிகையை அனுப்புகிறோம். நம்முடைய திரிபுணர்ச்சியினால் யாருக்காவது விடுபட்டிருந்தால் அவர்கள் 75 N. P. ஸ்டாம்புகள் வாங்கிக் கவரில் வைத்தனுப்பினால் அவர்களுக்கு அவ்வாங்கில நூல் அனுப்பப்படும். இது தனிப் புத்தகமாகவும் தயாராகியுள்ளது.

மற்றொன்றும் கவனிக்கவேணும். சிலவாண்டுகட்கு முன்பு நித்யாநுஷ்டான பத்ததியென்று நித்யோபயுக்த நூல் ஒன்று வெளியிட்டிருந்தோம். அது இப்போது துர்லபமாய் விட்டது. அபேக்ஷகர்கள் மலிந்திருந்ததனால் அதனை இப்போது மறு பதிப்பு (Reprint) செய்தோம். இப்பதிப்பில் சில விசேஷங்களுண்டு (அதாவது) வைதிக மந்த்ரங்கள் சுலோகங்கள் முதலான ஸம்ஸ்க்ருத பாகங்களை முன்பு தமிழ் லிபியில் மட்டும் அச்சிட்டிருந்தோம். இப்போது தேவநாகர லிபியிலும் சேர்த்து அச்சிட்டிருக்கிறோம். மற்றும் முக்கியமான சில விஷயங்களும் சேர்த்திருக்கிறோம். மேலே சொன்ன ஆங்கில ராமாயணம் சேர்த்த பத்ரிகைகளில் இது சேர்க்கப்படவில்லை. அது சேராத பத்ரிகைகளில் மட்டுமே இந்த நித்யாநுஷ்டான பத்ததி சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதுவும் தனிப் புத்தகமாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றது. அபேக்ஷையுள்ளவர்கள் ஒரு ரூபா ஸ்டாம்புகள் வாங்கி யனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். **க்ரந்தமாலா ஆபீஸ், சின்னகாஞ்சீபுரம்.**

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் அபிமானம்.

நமது ஸ்ரீராமாநுஜன் ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபையின் சார்பாக வெளிவரத் தொடங்கியதென்பதை யாவரு மறிவர். அந்த ஸபை 15 வருடங்களுக்கு முன்பு சென்னையில் ஸ்தாபிதமாகிச் சில கனவான்கள் அதற்கு அங்கத்தினராகச் சேர்ந்து பல பேர்களை ஜீவியச் சந்தாதாரர்களாகவும் ஸாதாரணச் சந்தாதாரர்களாகவும் சேர்த்ததனால் அப்போது தமிழ் லிபியிலும் தெலுங்கு லிபியிலும் பூர்வாசார்ய க்ரந்த ரத்னங்கள் பலவும் பதிப்பிக்க ஸௌகரிய மேற்பட்டது. அப்போதுதான் இந்த ஸ்ரீராமாநுஜன் பத்ரிகையும் தொடங்கலாயிற்று. ஆனால் அந்த ஸபையின் காரியம் நிரந்தரமாக நடைபெற்று வரவில்லை. ச்ரத்தையுடன் ஆரம்பித்த பெரியார்கள் கால க்ரமேண ச்ரத்தை குன்றியதனால் நோக்கத்தின்படி மேன்மேலும் பூர்வாசார்ய க்ரந்தங்களை வெளியிடுவதற்கு ஸௌகரியமில்லையாயிற்று. பகவத் பாகவத கிருபையினால் இப்பத்திரிகை மட்டும் இடையறாது நடைபெற்று வருகின்றது. எனினும், அந்த ஸபைக்கும் இப்பத்திரிகைக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. இது ஸத க்ரந்த ப்ரகாசன ஸபையின் சார்பாக வெளிவருவதென்று ஆரம்பத்தில் பதிப்பிக்கப்பட்டபடியால் அது மாற்றப்படாம லிருக்கின்ற தத்தனை.

அந்த ஸபையைத் தொடங்கின மஹான்களில் சிலர் இப்போது மிருப்பதனால் நாம் அவர்களைக் கண்டு அந்த ஸபைக்குப் புத்துயிரளிப்பது நலமல்லவா? என்று நாம் கேட்டுக் கொண்டதன்மேல் சிறிது ஊக்கங் கொண்டிருக்கின்றார்கள். அதன் பயனாக இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக் கெல்லாம் [சந்தாத் தொகை யனுப்ப நினைப்பூட்டி] கார்டு அச்சிட்டுப் போஸ்டு செய்தார்கள். ஒரு பத்து நபர்கள் சந்தாப் பணமனுப்பினார்கள். பலர் பதிலே தெரிவிக்கவில்லை. ஏற்கெனவே அனுப்பிவிட்டோமென்று சிலர் தெரிவித்துள்ளார்கள்.

மொத்தத்தில் சந்தா பாக்கியுள்ளவர்களே அதிகமாகத் தேறுகிறார்கள். இதன்மேல் ஸபையாருடைய ஆலோசனை எவ்விதமாக முடிவு பெறுகின்றதென்பது தெரியவேணும். சந்தா செலுத்தாதவர்களுக்குப் பத்திரிகை நிறுத்தப்பட வேண்டியதாகவே முடிவாகும். ... *

ஒரு பக்தருடைய கடிதம்.

L. MADAVABALAKRISHNAN,
Junior Deputy Superintendent.

Government Press,
MADRAS–1.
23–2–63.

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீயப்பதியான பீதகவாடைப் பிரானார் பரமகுருவாய் வந்து அவதரித்துள்ள ஸ்ரீஜகதாசார்யஸிம்மாஸநாதிபதி, பிரதிவாதிபயங்கரம் மஹாவித்வான்– அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் திருவடித்தாமரைகளுக்குத் தண்டம் ஸமர்ப்பித்து, அடியேன் விண்ணப்பித்துக்கொள்வது என்னவென்றால், இந்த ஆண்டு மார்கழித் திங்கள் முதல்நாள் முதல் பாசுர உபந்யாஸத்தின்போது கோஷ்டியில் ஸ்வாமிகள் "32 வருட காலமாகக் காலக்ஷேபம் கேட்டுக்கொண்டு இருப்பவர்களும் இருப்பார்கள்" என்று ஸாதித்தீர்கள். அதுபோல் 32 வருடங்களாக ஸ்வாமிகளின் உபந்யாஸம் கேட்டு வருபவர்களில் அடியேனும் ஒருவன் என்பதை மகிழ்ச்சியோடு விண்ணப்பித்துக்கொள்கிறேன். திருப்பாவைக் காலக்ஷேபத்ஸதத் தேனும் பாலுமாக வர்ஷித்துக் கோஷ்டியைப் பேரின்ப வெள்ளத்துள் மூழ்கச்செய்து ஞானத்தை ஊட்டி வருகிறீர்கள். ஸ்வாமிகளின் காலக்ஷேபத்தைக் கேட்க ஆரம்பித்தபோது அடியேன் அரசாங்க அச்சகத்தில் ஒரு பைண்டராக மாதம் 17 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தேன். இப்போது எனக்கு வயது 52 ஆகிறது. ஸ்வாமிகளின் கிருபையாலும் பெருமாளின் பேரருளாலும் ஷை அச்சகத்தில் ஒரு கெஜடட் ஆபீஸர் உத்யோகத்தில் ரூ. 500-க்குமேல் வாங்கிக்கொண்டு வருகிறேன். இதோடல்லாமல், ஸ்ரீஆண்டாள் ஸாதித்திருப்பதுபோலும் ஸ்வாமிகள் அடிக்கடி ஸாதிப்பதுபோலும் "எங்கும் திருவருள் பெறுவார்" என்பது ஸத்யமாகி, எல்லா வகைகளிலும் நன்மை அடைந்து வருகிறேனடியேன் என்பதை ஸ்வாமிகளின் சன்னிதியில் சுருக்கமாகத் தெரிவித்துக்கொண்டால் என்னுடைய பக்தி விசுவாஸத்தைச் செலுத்தியதாக இருக்கும் என எண்ணிக்கொண்டு இதை எழுதினேன். ஸ்வாமிகளுக்கு இத்தகைய கடிதத்தை வாசிப்பதற்கு சிரமம் கொடுத்ததற்காக மன்னிக்கும்படி பன்றுடிக் கேட்டுக்கொண்டு என்னுடைய சாஷ்டாங்க நமஸ்காரங்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஸ்வாமிகள் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்று அடியேன் ஸ்ரீமந்நாராயணனைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு அடியேன்,
மாதவபாலகிருஷ்ணன்.

சென்ற இதழில் திருநாராயணபுரச் செய்தி வெளியிட்டபோதே திருவுருவப்படம் வெளியிட்டிருக்கவேண்டும். அப்போது ப்ளாக்கு கைதவறியிருந்தபடியால் புநஸ்ஸப்ஸ்கரணம் செய்ய நேர்ந்து இவ்விதழில் அடுத்த பக்கத்தில் வெளியிடப்படுகிறது.



ஸ்ரீஉவே, சதுச்சாஸ்திரவித்வான்
மண்டயம் அனந்தாண்பிள்ளை. அனந்தாழ்வார்ஸ்வாமி
(வைகுண்டவாஸி) (வேதாந்த வாதாவளீகாரர்)

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நல்வார்த்தை நானூறு.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதியது.

முன்னுரை.

நம்முடைய ஸம்பிரதாயத்தில் வார்த்தாமாலை யென்றொரு சிறந்த திவ்ய க்ரந்தமுண்டு. அது நம்பிள்ளை காலத்தில் திருவவதரித்ததென்று பிரஸித்தம். அந்த மஹா க்ரந்தம் பூருவாசாரியர்களால் சுருக்கமாகவாவது வியாக்கியானிக்கப் பட்டிருந்தால் இக்காலத்தவர்களுக்குப் பெரிதும் பயன்படும். வியாக்கியானம் செய்யப் பெறாததோடு அச்சுப் பிழைகளும் மலிந்திருப்பதனாலும், பஹுஜ்ஞர்களின் உபதேசங் கொண்டல்லது அறியவொண்ணாத ஆழ் பொருள்கள் பலபல நிரம்பியிருப்பதனாலும் அஃது இக்காலத்தவர்களுக்குப் பயன்படாததாயிருக்கின்றது. அந்த ஸ்ரீகோசம் வெகுகாலத்திற்கு முன்பு தமிழ் லிபியிலும் தெலுங்கு லிபியிலும் அச்சிடப்பட்டிருந்தும் இக்காலத்தவர்களுக்கு மிகவும் துர்லபமாய் விட்டது. வெகு பரிச்ரமப்பட்டும் நமக்கும் ஒரு பிரதி கிடைக்கவில்லை. அக்குறை தீர நல்வார்த்தை நானூறு என்னு மிச்சிறுநூல் எழுதப்படுகின்றது. இதற்கு மூலம் நம்முடைய பூருவாசாரியர்களின் திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்கள் ரஹஸ்ய வியாக்கியானங்கள் ஸ்ரீ பாஷ்ய கீதா பாஷ்யங்கள் முதலியனவாகும். முன்வார்த்தைக்கும் பின்வார்த்தைக்கும் தொடர்புநிர்ப்பந்தமின்றிக்கே பெரும்பாலும் ஒவ்வொரு வார்த்தையும் தனித் தனிப் பொருளமைந்து நிற்கும். உபந்யாஸகர்களுக்கு இடையிடையே கூட்டிக்கொண்டு ஸபாரஞ்ஜனம் செய்வதற்கு மிகவும் பாங்காயிருக்குமென்னு மெண்ணங் கொண்டே இந்நூல் தொகுக்கப்படுகின்றது. வேதார்த்தங்கள் இதிஹாஸ புராணார்த்தங்கள் ஸ்ரீபாஞ்சராத்ர விஷயங்கள் தரும சாஸ்த்ரார்த்தங்கள் காவ்ய நாடகாலங்கார சித்திரங்கள் இலக்கண விலக்கிய வின்பங்கள் வைதிக லௌகிக கதைகள் என்றித்தகைய எல்லாவற்றையும் சேர்த்துத் தொகுக்க வாசைகொண்டே இஃது எழுதப்படுகின்றது. இதற்கு நானூறு என்றொரு ஸங்கியாநியமம் கொள்ளவேண்டிய அவசியமில்லையானாலும் ஒரு முடிவு வேண்டிக் கொள்ளப்பட்டது. மேன்மேலும் தொடர்ந்தே செல்லும்.

முன்னுரை முற்றிற்று.

1. முதல் வார்த்தை. வார்த்தா என்பது வடசொல். "வார்த்தா ப்ரவ்ருத்திர் வ்ருத்தாந்த:" என்ற அமரகோசத்தின்படி விருத்தாந்தத்திற்கு வார்த்தை யென்று பெயர். ஆனாலும் முன்னோர்களின் திவ்ய க்ரந்தங்களில் "பிள்ளா னருளிச் செய்யும் வார்த்தை; ஜீயரருளிச் செய்யும் வார்த்தை; பிள்ளை பணிக்கும் வார்த்தை" என்று அடிக்கடி வருதலால் துணுக்கையான ஸ்ரீஸூக்திக்கும் வார்த்தையென்று பெயருண்டு. 'அவனோடு நான் வார்த்தை சொல்லுவதில்லை, என்னோடு அவன் வார்த்தை சொல்லுவதில்லை' என வருமிடங்களில் வார்த்தை யென்பதற்குப் பேச்சு என்றே பொருள். நாச்சியார் திருமொழியில் 'செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர்

கேட்டிருப்பர்" என்னும் பாசுரத்தில் வார்த்தையென்பது பொதுப்பட ஸ்ரீஸூக்திக்கு வாசகமாக நின்றது. சிறுசிறுவிஷய விந்யாஸம் இங்கு வார்த்தையாகக் கொள்ளப்பட்டது. (1)

2. "भ्रातः पान्थ ! कुतो भवान् ? नगरतः, वार्ता न वा ? विद्यते, बाढं ब्रूहि, युवा पयोद समये त्यक्त्वा प्रियां निर्गतः । किं सा जीवति ? जीवतीति कथिता वार्ता मयाऽपि श्रुता, भूरेषा विपुला जनश्च विविधः किं किं न संभाव्यते ? ॥" இது குவலயானந்தத்தில் மேற்கோளாகக் கொடுக்கப்பட்ட சுலோகமொன்று. இருவர் ஸம்பாஷணையாக இது அமைக்கப்பட்டது. ஒருவன் சென்னையிலிருந்து செங்கற்பட்டு போகிறான்; எதிரே யொருவன் வருகிறான். அவன் இவனை நோக்கிக் கேட்கிறான் [ப்ராத:! பாந்த! குதோ பவாந்?] அண்ணே! எங்கிருந்து வருகிறாய்? [நகரத:] சென்னையிலிருந்து வருகிறேன். [வார்த்தா நவா?] நகரத்துச் செய்தி ஒன்றுமில்லையா? [வித்யதே.] ஏனில்லை, உண்டு. [பாடம் ப்ரூஹி] அப்படியானால் சொல்லு கேட்போம். [யுவா பயோதஸமயே ப்ரியாம் த்யக்த்வா நிர்க்கத:] யுவாவான வொருவன் மழை காலத்தில் மனைவியை விட்டிட்டு வெளிநாடேறச் சென்றனன். [கிம் ஸா ஜீவதி?] அப்படியா? அந்த மனைவி உயிருட னிருக்கிறாளோ? [ஜீவதீதி கதிதா வார்த்தா மயாபி ச்ருதா] நானென்ன பார்த்தேனா என்ன? பிழைத்திருக்கிறாளென்கிற பேச்சு என் காதிலும் விழுந்தது. [பூரேஷா விபுலா ஜநச் ச விவித: கிம் கிம் ந ஸம்பாவ்யதே?] பூமண்டலமோ விசாலமானது; ஜனங்களின் இயல்போ வெவ்வேறு வகையானது. எதுதான் ஸம்பவிக்க மாட்டாது. மழை காலத்தில் யுவாவானவன் வெளியிற் போவதென்பது அஸம்பாவிதம்; அதிலும் காதலியை விட்டுத் தனியே போவதென்பது பின்னையும் அஸம்பாவிதம், பிரிந்த துணைவி பிழைத்திருக்கிறாளென்பது ஸர்வாத்மநா அஸம்பாவிதம் என்பது இந்த ஸம்பாஷணையிலிருந்து தேறினது. (2)

3. திருமங்கையாழ்வார் எம்பெருமானைப் பிரிந்து தாம் கிலேசப்படுவதைப் பெண் பாவனையிற் பேசுகின்றார். பரகாலரான நிலைமை தவிர்ந்து பரகால நாயகியான நிலைமையேற்றுத் திருக்கண்ணபுரத்துச் சௌரிப் பெருமாள் திறத்துப் பிரிவாற்றாமையைப் பேசும் பதிகமான * தந்தை காலில் விலங்கற * என்னும் திருமொழியில் (பா - 8.) "ஒழுகு நுண் பனிக் கொடுங்கிய பேடையை அடங்க அஞ்சிறை கோலித் தழுவு நள்ளிருள் தனிமையில் கடியதோர் கொடுவினை யறியேனே." என்பது மிகவுருக்கமான பாசுரம். பறவைக் கூட்டங்களும் குளிர்க்கு அஞ்சி ஒடுங்கிக் கிடக்கும் பேடையைச் சிறகினால் அணைத்து ஒன்றிக் கிடக்கும்படியான நள்ளிருட் போதிலே நாயகனைப் பிரிந்து பரிதபியா நின்ற என்னைப் போலே பாவஞ் செய்தாரும் உலகிலுளரோ? எனப்படுகிறது. பனி காலத்தில் தலைவனைப் பிரிந்து தனிக் கிடை கிடப்பதற்கு மேற்பட்ட பாவமில்லை யென்றவாறு. ... (3)

4. குரரி யென்பது ஒரு பறவை. இது க்ரௌஞ்சமென்றும் வழங்கப்பெறும். தமிழில் இது அன்றில் எனப்படும். இது பெரும்பாலும் அழுதுகொண்டே யிருக்குமாதலால் அழுகுரலன்றில் என்றும் சொல்லப்படுவதுண்டு. இப்பறவை பெரும்பாலும் பனைமரத்தில் வாழும். எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியா திருக்கும். கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல் ஒன்றை யொன்று இரண்டு மூன்றுதரம் கத்திக் கூவி, அதன் பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துவிடும். ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளில் அன்றிலைப் பற்றின ப்ரஸ்தாவம் அடிக்கடி வரும். காமோத்தீபக வஸ்துக்களில் இதுவும் ஒன்றாகப் பரிகணிக்கப்படுகின்றது. (4)

5. திருநறையூரென்னும் திவ்யதேசத்திற்கு நாச்சியார் கோயிலென்னுந் திருநாமமே மிகப் பிரசித்தமாக வழங்கி வருகின்றது. இத்தலத் தெம்பெருமான் விபவ மூர்த்தியாகி விவாஹாபேக்ஷையுடன் பெண் கேட்கச் சென்றவிடத்தில் பெண்ணின் தந்தை தாயர் 'எங்கள் பெண்பிள்ளை மிக்க சீருஞ் சிறப்புமாக வளர்கின்றவள்; இவள் ஸ்வாதந்திரியம் குன்றாமே மஹாவைபவம் பொலிய வாழ்ச்சி நடத்துமாறு சபதம் செய்து கொடுத்தீராகில் உமக்கு இவளைத் தாரை வார்த்துத் தருவோம்' என்றனராக, பெண் கேட்ட பெருமான் அப்படியே இசைந்து சபதம் செய்து கொடுத்து மணம் புணர்ந்து கொணர்ந்து, இவளுடைய பெயராலேயே தன்னூர்க்கு வ்யபதேசமிட்டு (அதாவது) 'நாச்சியார் கோயில்' என்றே பெயராக்கி, திருவீதிப் புறப்பாடுகளில் நாச்சியார் முன்னே யெழுந்தருளவும் நம்பி பின்னே யெழுந்தருளவுமான வொரு ஸம்பிரதாயம் நாளைக்கும் நிகழ்ந்து வருகின்றது. ... (5)

6. பெரியதிருமொழியில் திருநறையூர்ப்பாடலில் (6–7–6) "பள்ளிகமலத்திடைப் பட்ட பகுவாயலவன்முகநோக்கி, நள்ளியூடும் வயல் சூழ்ந்த நறையூர்" என்றுள்ளது. அலவன் என்று ஆண் நண்டுக்கும், நள்ளி யென்று பெண் நண்டுக்கும் பெயர். ஆண் நண்டானது தாமரை மலரிலே சென்று சிறைப்பட்டிருந்து வந்து சேர்ந்ததாகவும், அதனிடத்திலே பெண் நண்டு பிரணயரோஷம் காட்டுவதாகவும் வயல் நிகழ்ச்சி இங்குக் காட்டப்பட்டுள்ளது. இதன் கருத்து விளங்கவில்லை. இதை பட்டர் விவரித்துரைத்த விதம் கேண்மின்;– ஓர் ஆம்பல் மலரிலே நண்டு தம்பதிகள் இனிது வாழ்கையில் பேடை கருக்கொண்டது (கர்ப்பிணியாயிற்று); அப்பேடைக்கு இனியபொருளைக் கொணர்ந்து தரவேணுமென்று ஆசையுண்டாயிற்று. ஆம்பல் மலரில் தேன் கிடையாது; அஃது உள்ளது தாமரைமலரிலாதலால், அங்கிருந்து கொணர்ந்துகொடுப்போமென்றெண்ணிப் புறப்பட்டு மெல்லமெல்ல நகர்ந்து தாமரைப்பூவிலே சேர்ந்தது. அவ்வளவிலே கதிரவன் அஸ்தமிக்கவே தாமரை மலர் மூடிக்கொள்ள அதனுள்ளே அகப்பட்டது அந்த நண்டு. தாமரையை மலர்த்திக்கொண்டு எப்படியாவது வெளிக்கிளம்பிவிடவேணுமென்று எவ்வளவோ முயன்றவளவிலும் ஸூர்யோதயமானாலல்லது தாமரை மலராதாயிற்று. உடம்பைக்கொண்டு புரண்டு இரவெல்லாம் அதிலே தங்கியிருந்து பொழுது விடிந்தவாறே மலர்ந்த அம்மலரினின்று வெளிப்பட்டு, தாதும் சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத் தோற்றத் தன்னிடமான ஆம்பலுக்கு விரைந்து வந்து சேர்ந்தது. ஆம்பல் மலரானது பகற்போதில் மூடிக்கொள்ளுமே; ஆண் நண்டு அங்கு வந்து சேரும் ஸமயமும் பெண்நண்டுகிடக்கும் ஆம்பல் மலர் மூடிக்கொள்ளும் ஸமயமும் ஒன்றாயிருந்தது. இதைப் பார்த்தால், ஆண் இரவில் வேறிடத்துத் தங்கிவந்தபடியாலும் உடம்பில் சுவடு இருந்தபடியாலும் பிரணய ரோஷங்கொண்டு கதவையடைத்துக்கொண்டது போலும்! என்னலாம்படியிருந்ததாம். ஒருபுறத்தில் மலர்ந்த தாமரைகளும், மற்றொரு பக்கத்தில் மலராத ஆம்பல்களும் விளங்கப்பெற்றவயலால் சூழப்பட்டது திருநறையூர் என்றதாகத் தேறுகிறது. இதை நேர்கொடுநேரே சொல்லாமல் அலவனுக்கும் நள்ளிக்கும் ஊடல் நடப்பதாகச் சொன்னது கவி சமத்காரம். இதை மருமமறிந்து விவரித்தது பட்டருடைய அத்விதீயமேதாவிலாஸம். இங்ஙனே பட்டர் பொருளருளிச் செய்தபோது கேட்டிருந்த பிள்ளை திருநறையூரரையர் 'பெண் நண்டு கதவடைத்துத் தண்டனை செய்தது ஏதோ குற்றம் நினைத்தல்லவா? விசாரணை செய்தல்லவோ குற்றத்தை நிச்சயிக்கவேணும்; விசாரணை செய்யாமலே தண்டித்துவிடலாமோ?' என்று கேட்டாராம். அதற்கு பட்டர் ரஸகனமாக விடையிறுத்தாராம்—'வாஸ்தவந்தான்; நாம் என்செய்வது? கேள்வியில்லாதபடி பெண்

ணரசு நாடாயிற்றே!' என்றாராம். பெண்ணரசுநாடு என்றதன் மருமத்தை கீழ் ஐந்தாவது வார்த்தையினால் விளங்கவறிக. ... . (6)

7. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் அத்தாணிச் சேவகம் என்பது ஓர் சிறந்த வார்த்தை. இப்பிரயோகம் பெரியாழ்வார் திருவாக்கில் தோன்றியது. திருப்பல்லாண்டில "நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்" என்றதும், பெரியாழ்வார் திருமொழியில் "அண்டத் தமரர்கள் சூழ அத்தாணி யுள்ளங் கிருந்தாய்" என்றதும் காணத்தக்கன. ஆஸ்தானம் என்னும் வடசொல் அத்தாணியென விகாரப்பட்டது. அத்தாணிச் சேவகமாவது ஆஸ்தான ஸேவகம். எம்பெருமா னெழுந்தருளி யிருக்குமிடங்கள் தோறும் தவறாது உடனிருந்து தொண்டாற்றுகை யென்க. .... (7)

8. சாமானியர்கள் தாம்பூலம் என வழங்குவதை ஸ்ரீவைஷ்ணவப் பெரியார்கள் அடைக்காய் என வழங்குவர். திருப்பல்லாண்டில "கையடைக்காயும்" என்றதும், பெரியாழ்வார் திருமொழியில் "ஆய்ப்பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தார் அடைக்காய் திருத்தி நான் வைத்தேன்" என்றதும் காணத்தக்கன. அடை என்று இலைக்குப் பெயர்; வெற்றிலை யென்றவாறு; காய் என்று பாக்கைச் சொன்னபடி. ஆக அடைக்காய் என்றது வெற்றிலை பாக்கு என்றதாயிற்று. ... . (8)

9. முற்காலத்தில் அம்மங்கியம்மாள் என்னும் ஓராசிரியர் நோயால் வருந்தியிருக்க, நஞ்சீயரும் நம்பிள்ளையும் அவரைக் கண்டு விசாரிக்க எழுந்தருளியிருந்தனர். அப்போது அவர் மிகவும் கிலேசப்படுவதைக் கண்டு நஞ்சீயர் 'ஸ்வாமிந்! தேவரீர் ஸாமாந்ய மநுஷ்யரன்றே; எவ்வளவோ பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணியிருக்கிறீரே; குணாநுபவத்தாலல்லது போதுபோக்கி யறியீர்; இப்படிப்பட்ட வும்மையும் எம்பெருமான் மற்றவர்களைப் போலே இப்படி கஷ்டப்படுத்துகின்றானே!' என்றாராம். அதற்கு அவர் "நீயாளவளையாள மாட்டோமே * என்றன்றோ கலியன் பாசுரம்; எம்பெருமானுக்கு வாழ்க்கைப்பட்டால் கிலேசப்பட்டுத்தானே யிருக்கவேண்டும்" என்றாராம். பிறகு வெளியில் எழுந்தருளும்போது நஞ்சீயர் நம்பிள்ளையை நோக்கி "பார்த்தீரா இவருடைய அத்யவஸாயத்தை! அஸஹ்யமான கிலேச தசையிலும் என்ன தெளிவு பார்த்தீரா? என்ன பாசுரமெடுத்துக் காட்டினார்!' என்றருளிச் செய்து மகிழ்ந்தாராம். பெரிய திருமொழி மூலத்தில் (3—6—9) "நீயாள வளையாள மாட்டோமே" என்றுள்ளது. உண்மையில் இச்சந்தையின் கருத்தைச் செவ்வனே தெரிந்துகொள்வது சிரமம். எம்பெருமானுக்கு வாழ்க்கைப்படுவதென்றால் கிலேசப்படுகை தான்; கிலேசப்படாதிருக்க வேணுமானால் எம்பெருமான் திறத்தில் ஈடுபடலாகாது. என்னுமிடம் பெறுவிக்கப்படுகிறது. பாகவதர்களுக்கு உண்டாகும் நோய் பகவத் விச்லேஷப்ரயுக்தமே யல்லது மற்றைப்படியான சாதுர்த்திகமன்று என்பதும் தெரிவித்தபடி. (9)

10. "பிரியேன், பிரியில் தரியேன்" என்பது அன்பின் பரீவாஹமான பேச்சுக்களில் தலையானது. காதலன் காதலியை நோக்கித் தன் பிரேமத்தை யெல்லாம் வெளியிட்டுக் கொண்டு சொல்லுகையில் 'பிரியேன், பிரியில் தரியேன்' என்பனும். அதாவது, 'காதலி! உன்னைவிட்டுப் பிரியவே மாட்டேன்; ஒருகால் விதிவசத்தால் பிரிய நேர்ந்தால் ஒரு கணப் பொழுதும் தரிக்கமாட்டேன்' என்றவாறு. இப்படி அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பன். இப்படி யிருக்கையில் ஒருநாள் அவள் இறந்தொழிந்தாள். அப்போது இவன் செய்யவேண்

டியதென்ன? * பிரியில் தரியேனென்று சொல்லிக் கொண்டிருந்ததற்குச் சேர உடனே தானும் இறந்தொழிய வேணும். தன்னை யறியாமலே பிராணன் படுக்கென்று போகவேணும். போகவில்லை. விக்கி விக்கி யழுகிறுனிவன். ஆகாயத்தை நோக்கி யழுகிறுன். நிலத்தில் புரண்டுருண்டழுகிறுன். ஓயாம லழுகிறுன். பார்ப்பவர்கள் 'அப்பப்ப! என்ன அன்பு! என்ன அன்பு!!' என்று மாய்கிறுர்கள். உண்மை யறிந்த வொரு பண்டிதன் பகர்கின்றுன்—
"यदि प्रियावियोगेऽपि रुद्यते बलवत्तरम्। तदिदं दग्धमरणमुपयोगं क्व यास्यति ॥ —யதி ப்ரியா வியோகேபி ருத்யதே பலவத்தரம், ததிதம் தக்தமரணம் உபயோகம் க்வ யாஸ்யதி?" என்றுன். அப்பா! பரிஹாரமற்ற இவ்வாபத்திலும் நீ அழுது கொண்டு கிடந்தாயாகில், இத்தகைய ஆபத்துக்கென்று அருமருந்தாக ஏற்பட்டிருக்கிற பாழும் மரணம் வேறு எப்போதுதான் உப யோகப்படப்போகிறது? என்று கேட்டானுயிற்று. இத்தால் ஏற்படுவதென்ன? அழுவ தென்பது தேஹத்திற்கு அபாயம் நேராதபடி தரித்துக்கொள்வதற்கான ஓர் உபாயமே யொழிய "பிரியில் தரியேன்" என்றதற்குச் சேர்ந்த காரியமன்று என்பதாம். ... (10)

11. வெஃகா என்று திவ்யப்பிரபந்தங்களில் பாடப்படுகின்ற தலம் ஸ்ரீயதோக்த காரி ஸன்னிதி. தேவப்பெருமாள் ஸன்னிதிக்கு அணித்தானதிது. நான்முகன்செய்த யாகத் திற்குக் காரணவிசேஷத்தினுல் இடையூறு செய்யவந்து வேகவதிநதியாகப் பெருகின ஸரஸ் வதியின் செருக்கடங்க எம்பெருமான் அணையாகப்பள்ளிகொண்ட தலம் இது. இந்த ஸன் னிதியின் பக்கத்திலுள்ள தாமரைத்தடாகத்தில் பொய்கையாழ்வார் * வனச மலர்க்கருவத னில் வந்துதித்தார். திருமழிசையாழ்வார் இத்தலத்தில் வெகுநாள் எழுந்தருளியிருந்து இப் பெருமானுடைய ஸௌலப்ய ஸௌசீல்யங்களை உலகமறியச்செய்த இதிஹாஸம் அறியத் தக்கது. அது காரணமாகவே இப்பெருமானுக்கு வடமொழியில் 'யதோக்தகாரி' என்றும், தென்மொழியில் 'சொன்னவண்ணஞ்செய்த பெருமாள்' என்றும் திருநாமம் ப்ரஸித்தமா யிற்று. பொய்கையாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் திருமங்கை யாழ்வார் ஆகிய ஐவர் மங்களாசாஸனம் செய்த தலமிது. ... ... (11)

12. நம் பூர்வாசார்ய பரம்பரையானது மணவாளமாமுனிகளளவிலே முற்றுப் புள்ளி யிடப்பெற்றிருக்கின்றது. இவரருளிச்செய்த திவ்யஸூக்திகளினுலேயே பூர்வா சார்ய ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் பெருமையுண்டாயிற்றென்பது எள்ளளவும் அதிசயோக்தி யன்று. ஏற்கெனவே அவதரித்துள்ள பூர்வாசார்ய திவ்யஸூக்திகளை ப்ரவசனம் செய் தருள்வதிலேயே மிகுந்த அபிநிவேசமுடையரான மாமுனிகள் ஸ்வதந்த்ரமாகச் சில க்ரந்தங் கள் இட்டருளத் திருவுள்ளமுடையவரல்லரேயானுலும், இவ்வுலகின் பாக்யபரிபாகத்தாலும் சிஷ்யர்களின் பிரார்த்தனைக் கிணங்கியும் பகவந் நியமனத்தை முன்னிட்டும் * தேனே பாலே கன்னலே யமுதேயான பல திவ்யக்ரந்தங்களையும் அருளிச்செய்தருளும்படியாயிற்று. பிள்ளை லோகாசார்யரருளிச்செய்த ரஹஸ்யங்களில் ஸ்ரீ வசநபூஷணம் தத்வத்ரயம் முமுக்ஷுப்படி என்கிற மூன்று ரஹஸ்யக்ரந்தங்கள் மிகச் சிறந்தனவகளும் ப்ரதானங்களுமாகையாலே அம்மூன்றுக்கும் வியாக்கியானமிட்டருளினுர். பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பி யாரான அழகியமணவாளப்பெருமாள் நாயனுர் அருளிச்செய்த ஆசார்ய ஹ்ருதயமென் னும் ரஹஸ்ய ரத்னத்திற்கு வியாக்கியானமிட்டருளினுர். பெரியவாச்சான்பிள்ளை நாலா யிரத்திற்கும் பூர்த்தியாக வியாக்கியானமருளிச்செய்திருந்தும் அதில் பெரியாழ்வார்திரு

மொழி முதற்பாசுரம் தொடங்கி "வாக்குத்தூய்மை யிலாமையினாலே மாதவா்வுன்னை" (5-1-1) என்கிறவளவும் வியாக்கியானம் கரையானுக்கு இரையாகி துர்லபமாய் விட்டபடியாலே அவ்வளவுக்குத் தாம் வியாக்கியானமிட்டருளினார். இராமானுச நூற்றந்தாதிக்கு உரையிட்டருளினார். அருளாளப் பெருமானெம்பெருமானாரருளிச் செய்த ஞானசாரப் பிரமேய சாரங்களுக்கு ஸம்வாத ப்ரமாணங்களைச் சேர்த்தருளினார். கீதைக்குத் தாத்பர்ய தீபமென்றொரு வியாக்கியானம் இட்டருளினார். ஈடு முப்பத்தாறாயிரப்படிக்கும் தாமருளிச்செய்த ரஹஸ்ய வ்யாக்கியானங்களுக்கும் பிரமாணத்திரட்டுகள் ஸங்க்ரஹித்தருளினார். திருவாராதந ப்ரயோகமொன்று திருவாய் மலர்ந்தருளினார். உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி என மூன்று தமிழ்ப் பிரபந்தங்களருளிச் செய்தார். தேவராஜமங்களமும் யதிராஜ விம்சதியு மருளிச்செய்தார். மற்றும் ஸ்ரீஸூக்தி விசேஷங்களுண்டாகில் கண்டுகொள்வது. முக்தகங்கள் பலவுண்டு. ... ... (12)

13. உலகில் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர்கள் பல ஆசார்யர்களுமுண்டு. எனினும், மணவாளமாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யமும் காம்பீர்யமும் அர்த்த புஷ்டியும் ரஸபுஷ்டியும் அநிதரஸாதாரணமாகவே யிருக்கும். * நாமூலம் லிக்யதே கிஞ்சித் நாநபேக்ஷித முச்யதே * என்னும்படி யமைந்த வியாக்கியானம் மாமுனிகளுடையதேயாம். வேறு எந்த ஆசிரியரும் இங்ஙனே வியாக்கியானம் அமைக்கக் கற்றிலர் என்றால் இது அபிமானோக்தியாகாது. தத்வத்ரயவியாக்கியானாதிகளில் பல மதாந்தரங்களைக் கண்டித்து எழுதினாலுங்கூட ஒருவருடைய மனமும் நோகாதபடிக்கும் வ்யர்த்ததூஷண பரிஹாரங்களைச் சிறிதும் புகவிடாதபடிக்கும், எந்த இடத்தை யெடுத்தாலும் சாஸ்த்ரார்த்தமே கைகொள் கனியாம்படிக்கும் 'ஸகலசாஸ்த்ர ஸாகர பாரங்கதர் இவரொருவரே' என்று திண்ணமாக எண்ணும்படிக்கும், அநந்வயம் க்லிஷ்டாந்வயம், மயங்கவைத்தல் முதலிய தோஷங்களுக்குச் சிறிதும் இடமில்லாதபடிக்கும் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர் மாமுனிகளொருவரே. ஸூத்ரம் போன்ற பிள்ளை லோகாசார்ய திவ்ய ஸூக்திகளுக்கு அவதாரிகையிடுகிற அழகும் மூலத்திற்கு அர்த்தமருளிச்செய்கிற வைகரியும், ஆங்காங்கு அர்த்தங்களைப் பிண்டீகரித்து நிகமித்தருளுகிற அற்புதமும் * உள்ளுந்தோறு மென்னெஞ்சு எரிவாய் மெழுகொக்கும். வஸ்துத: இவ்வாசிரியருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்த பின்பு இன்னொரு வாக்கில் வாயை வைத்தால் * ஸ்திதேரவிந்தே மகரந்தநிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே * என்ற ஸூக்திக்கு விருத்தமாகச் செய்கிறோமென்று தோன்றுகிறதேயன்றி வேறில்லை. (13)

14. ஆசாரியர்கள் ஜீவித்திருக்கும் நாளில் தம்மை அடிபணிந்தவர்களுக்கு உஜ்ஜீவனோபாயமாக உபதேசங்களைச் செய்வது உபகாரமெனப்படும். பிற்காலத்தவர்களும் நெடுநாள் வாழும்படி நூல்களை இயற்றி வைப்பது மஹோபகார மெனப்படும். இத்தகைய மஹோபகாரம் செய்தருளின ஆசார்யர்களையும் அவர்களின் உபகார விசேஷங்களையும் நாம் அநுதினமும் அநுக்ஷணமும் சிந்தை செய்யவேண்டும். ஸ்ரீமந்நாதமுனிகள் ந்யாயதத்வம் என்றொரு மஹாக்ரந்தமருளிச் செய்திருந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் அது நெடுநாளைக்கு முன்னமே லுப்தமாய் விட்டதால் நம்போல்வார்க்கு அதை ஸேவிக்க பாக்யமில்லையாயிற்று. தேசிகன் பணித்த குருபரம்பராஸாரத்தில் "இவ்வாசார்யர்களில் ஈச்வரமுனிகள் பிள்ளை நாதமுனிகள்; இவர் ந்யாயதத்வ மென்கிற சாஸ்த்ரமும் யோக ரஹஸ்யமுமருளிச் செய்தார்" என்றிருக்கையாலே யோகரஹஸ்யமென்றொரு க்ரந்தமுமருளிச் செய்திருந்ததாக அறியலாகிறது. ந்யாயதத்வமென்னும் மஹாக்ரந்தத்தின் மங்களச்லோகம் மாத்திரம் ரஹஸ்

யத்ரயஸாரத்தில் தத்வத்ரயசிந்தநாதிகாரத்திலும் த்வயாதிகாரத்திலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அது வருமாறு—* யோவேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:, தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே * என்று. இவ்விரண்டு க்ரந்தங்களும் நமக்கு துர்லபமாய்விட்டது பெரிய குறையே. ... ... (14)

15. ஸ்ரீமந்நாதமுனிகளுக்குப் பின் ஆளவந்தாரே க்ரந்தமருளிச்செய்தவர். முன்னே ப்ரஸ்தாவித்த குருபரம்பராஸாரத்தில்—'நாதமுனிகள் பிள்ளை ஈச்வரபட்டாழ்வான் ; அவர் பிள்ளை ஆளவந்தார். இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் ஆகம ப்ராமாண்யமும் புருஷ நிர்ணயமும், ஆத்ம ஸித்தி ஈச்வரஸித்தி ஸம்வித்ஸித்தியென்கிற ஸித்தித்ரயமும், ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹமும் ஸ்தோத்ரமும் சதுச்ச்லோகியும் ஆக எட்டு'' என்றிருக்கையாலே மேலேகுறித்த க்ரந்தங்களே ஆளவந்தாரருளிச்செய்தவையாம். இவற்றில் புருஷநிர்ணயமென்கிற க்ரந்தம் இப்போது துர்லபம். வெகுகாலத்திற்கு முன்னமே லுப்தமென்கிறார்கள். ஆகமப்ராமாண்யமும் ஸித்தித்ரயமும் கீதார்த்தஸங்க்ரஹமும் ஸ்தோத்ரரத்நமும் சதுச்ச்லோகியுமே இப்போது பிரசாரத்திலிருப்பவை. முந்தின இரண்டு திவ்யக்ரந்தங்களுக்குப் பூருவர்களின் வியாக்கியானம் அவதரிக்கவில்லை. பிந்தின மூன்று க்ரந்தங்களுக்கு உண்டு. ... (15)

16. ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர்களில் திருக்கச்சிநம்பிகள் தேவராஜாஷ்டகமருளிச்செய்தது தவிர, வேறு ஓராசார்யரும் ஒரு க்ரந்தமுமருளிச்செய்ததாகத் தெரியவில்லை. எம்பெருமானாருடைய திவ்யக்ரந்தங்கள் நவரத்தினமோ! நவநிதியோ! என்னலாம்படி ஒன்பதாக அமைந்திருக்கின்றன. கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், சரணாகதிகத்யம், ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்டகத்யம், நித்யம்—என்பன. இவற்றுள் சரணாகதிகத்யம் முதலிய மூன்று கத்யங்களை ஒன்றுசேர்த்து கத்யத்ரயமென்று ஒரே க்ரந்தமாக வழங்குவர்களாயினும் அவை தனித்தனி க்ரந்தங்களேயாம். ஆகவே ஸ்வாமி ஸாதித்த திவ்யக்ரந்தங்கள் ஒன்பது. .... (16)

17. எம்பெருமானாருடைய ஒன்பது க்ரந்தங்களுள் வேதாந்ததீபம் வேதாந்தஸாரம் நித்யம் ஆகிய மூன்று க்ரந்தங்களுக்குத் தவிர மற்றவற்றுக்குப் பூருவர்களின் வியாக்கியானங்கள் அவதரித்திருக்கின்றன. கீதாபாஷ்யத்திற்கு தாத்பர்யசந்த்ரிகை, ஸ்ரீபாஷ்யத்திற்கு ச்ருதப்ரகாசிகையும் ச்ருத ப்ரதீபிகையும். [ச்ருத ப்ரதீபிகையென்பதும் ச்ருத ப்ரகாசிகாசார்யரே அருளிச்செய்த ஸங்க்ரஹவ்யாக்கியானம். இது சதுஸ்ஸூத்ரிவரையிலுமே தெலுங்குலிபியில் நெடுநாளைக்குமுன் அச்சேறியிருக்கிறது]. ஸ்ரீபாஷ்யத்திற்கு—ச்ருதப்ரகாசிகைக்கும் முன்னே வியாக்கியானமவதரித்திருந்ததாக ச்ருதப்ரகாசிகையினால் தெரியவருகிறது. ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் "த்விசந்த்ரஜ்ஞாநாதாவபி அங்குல்யவஷ்டம்ப திமிராதிபி:" இத்யாதியருளிச்செய்துகொண்டுபோகையில் "அதவா கிமநேந பஹூநோபபாதந ப்ரகாரேண" இத்யாதி வாக்யபாடம் உண்டா இல்லையா என்பதை விமர்சியாநின்ற ச்ருதப்ரகாசிகாசார்யர் "அதவா கிமநேநேத்யாதிபாடோ பஹுஷு கோசேஷு த்ருச்யதே'' என்று ஸாதித்துவிட்டு உடனே "வ்யாக்க்யாத்ருபி: வ்யாக்க்யாதச்ச'' என்று ஸாதித்திருக்கிறார். இதனால் தமக்குமுன்னே ஸ்ரீ பாஷ்யத்தை வியாக்கியானித்தவர்கள் சிலருண்டென்று ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டதாகிறது. ச்ருதப்ரகாசிகை அவதரித்தபிறகு அது மறைந்திருக்கக்கூடும். வேதார்த்த ஸங்க்ரஹத்திற்கு ச்ருதப்ரகாசிகாசார்யரே தாத்பர்யதீபிகை யென்கிற வியாக்கி

யான மருளிச் செய்திருப்பது ப்ரசாரத்திலுள்ளது. கத்யத்ரயத்தில் சரணாகதிகத்யத்திற்கு மாத்திரம் ச்ருதப்ரகாசிகாசார்யருடைய வியாக்கியானமுள்ளது. மூன்று கத்யங்களுக்கும் ஆச்சான் பிள்ளையின் மணிப்ரவாள வியாக்கியானமும் தேசிகனுடைய ஸம்ஸ்க்ருத வியாக்கியானமுமுள்ளன. மற்றுஞ்சில வியாக்கியானங்கள் லுப்தங்கள். ... . (17)

18. எம்பெருமானார் தம்முடைய திருவடிகளில் ஸாக்ஷாத்தாக ஆச்ரயித்திருந்தவர்களுள் திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹமாக வொரு வியாக்கியான மிடும்படி திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்கு நியமித்தருள அவர் ஆறாயிரப்படி யென்று ப்ரஸித்தமாயுள்ள வியாக்கியானத்தை யருளிச் செய்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் முதன் முதலாகத் திருவவதரித்த மணிப்ரவாள க்ரந்தம் இதுவேயாகும். இது அவதரித்த வேளையின் மஹிமையினால் திருவாய்மொழிக்கு மற்றும்பல வியாக்கியானங்கள் அவதரிக்கலாயின. அவற்றுள் ஈடு முப்பத்தாறாயிரப்படி மிகச்சிறந்து விளங்குவது. அதற்குத்தான் பகவத்விஷயமென்று வ்யபதேசம். அதைக்கொண்டு போதுபோக்குவார்க்குப் பேரின்பவெள்ளம் பெருகும். (18)

19. நமது போது நல்ல போதாகக் கழியவேணுமென்கிற நினைவுடையவர்கள் கீழ்க்காணும் பத்து விஷயங்களை அடிக்கடி சிந்திக்கவேணும்; கூடியவரையில் அநுஷ்டானத்தில் கொண்டுவரவும் முயலவேணும். 1. அஹங்காரம் எல்லாப்படியாலும் ஸ்வரூபத்தைக் கெடுக்கவல்லதாகையாலே அது கழியும் வழி யென்னவென்று சிந்திக்கவேணும். 2. அந்த அஹங்காரத்தை வளரச்செய்கிற தீயாரோடு ஸஹவாஸத்தை யொழிக்கவேணும். 3. அஹங்காரம் முதலிய பல குற்றங்களை உபதேசம் முதலியவற்றால் போக்கவல்லவர்களான மஹான்களை தேஹபந்துக்களாகவும் ஆத்மபந்துக்களாகவும் கிம்பஹுநா? ஸகலவித பந்துக்களாகவும் நினைத்து அவர்களையே உசாத்துணையாகக் கொள்ளவேணும். 4. ஞானபக்தி விரக்திகள் மலிந்த மஹான்களைக்கண்டால் நிலாத் தென்றல் சந்தனம் புஷ்பம் முதலியன கண்டாற் போலே நெஞ்சு குளிர்ந்திருக்கவேணும். 5. அஹங்காரத்தினுடையவும் அர்த்தகாமங்களினுடையவும் கெடுதல்களை அநவரதம் சிந்திக்கவேணும். சமதமாதி குணங்கள் வளரும்வழி பார்க்கவேணும். 6. பகவத் குணாநுபவத்திலும் பூர்வாசார்ய ப்ரபாவ அநுஸந்தானத்திலுமே அதிக காலம் கழியும்படி நோக்கவேணும். 7. விலக்ஷணர்களுடைய ஞானமும் அநுட்டானமும் நமக்கு உண்டாகவேணுமென்று ஆசைப்படவேணும். 8. ஜ்ஞாநாநுஷ்டானங்களை வளர்க்கவல்ல ஸத்துக்களை ஒரு நொடிப்பொழுதும் விட்டுப் பிரியாமலும் ஸ்வரூபத்தைக் கெடுக்கவல்ல நீசர்களைக் கண்ணெடுத்துப் பாராமலும் இருக்குமிருப்பை அருளவேணுமென்று அநவரதம் பகவானைப் பிரார்த்திக்கவேணும். 9. பிறரிடத்தில் மலைமலையான தோஷங்களிருந்தாலும் அவற்றில் கண் செலுத்தாமலும் குணலேசங்களையே மலையாகக்கொண்டு உகந்திருப்பதும், தோஷங்களே வடிவெடுத்திருக்கின்ற நமக்கு ஒரு குணமுமில்லையே யென்று நொந்திருப்பதும் நித்யமாகச் செல்லவேணும். 10. பிறரிடத்திலே தோஷங்களைப் பேசுவதானது நிர்மலமான ஆகாசத்திலே சேற்றைவாரி யெறியுமவன் செய்கைபோலே யாகுமத்தனையென்று திண்ணமாகக்கொண்டு, அஸூயையையும் அஹங்காரத்தையும் அறவே யொழித்தாலன்றி நாம் உய்ய விரகில்லையென்று துணிந்திருக்கவேணும். ஆக இவ்விஷயங்களை நிச்சலும் நெஞ்சிற்கொண்டிருப்பார்க்கு இங்குமங்குமெங்குமின்பமே. (19)